யாழ்ப்பாணம்
- 2 FEB 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 தை 19 புதன்கிழமை (02 - 02 - 2000) VALAMPURI ஒலி: 45

### ★25 ஆம் திகதி கைது செய்யப்பட்ட மாணவர்கள்

# பலாலி இராணுவ முகாமில் வைத்து

# இன்று விடுதலை செய்யப்படுவர்!

(யாழ்ப்பாணம்)

கடந்த இருபத்தைந்தாம் திகதி உரும்பிராயில் வைத்து கொழும்பிலிருந்து வந்த விசேட புலனாய்வுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இரு பாடசாலை மாணவர்களும் அவர்களது தாயாரும் இன்று பலாலி இராணுவத் தலைமையகத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் என பலாலி இராணுவ முகாம் தலைமையக பாதுகாப்பு அதிகாரி மேஜர் மகத்தா தெரிவித்துள்ளார்.

யாழ். வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவி பிரியா சிறீஸ்கந்தராசா, அவரது சகோதரன் சிறீஸ்கந்தராசா வினோத், அவர்களது தாயாரான திருமதி சிறீஸ்கந்தராசா வளர்மதி ஆகியோரைக் கொழும்பிலிருந்து வந்த விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்து கொழும்புக்குக் கொண்டு சென்றமை ஏற்கனவே தெரிந்ததே.

இவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து யாழ். குடாநாட்டு பாடசாலைகள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஆரம்பித்து நடாத்தி வந்துள்ளார்கள்.

இப்பகிஷ்கரிப்புப் போராட்டம் குடா நாடுதழுவிய நிலையில் பரவலாக்கப்பட்டதையடுத்து, வடமாகாண அதிபர்கள் சங்கம், மாணவர் அமைப்புகள், மற்றும் பல்வேறு சமூக அமைப்புக்களும் இணைந்து மாணவர்களின் விடுதலை தொடர்பாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இரண்டாவது நாளாக நேற்றும் மாணவர் பாடசாலையை பகிஷ்கரித்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவி பிரியாவையும், அவரது சகோதரரான யாழ். உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவன் வினோத் ஆகிய இருவரையும் விடுவிக்குமாறு கோரி நேற்று இரண்டாவது நாளாக பகிஷ்கரிப்புப் போராட்டம் நடாத்தப்பட்டது.

நேற்றைய பகிஷ்கரிப்பின் போது குடாநாட்டுப் பாடசாலைகள் அனைத்தும் மாணவர்களின்றி வெறிச்சோடிக்காணப்பட்டதாகவும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாலை ஷெல் வீச்சு யாழ்நகரை உலுக்கியது

இன்று அதிகாலை திடீரென இடம்பெற்ற பயங்கர ஷெல் தாக்குதல்களினால் யாழ்நகரை சிலமணி நேரம் அதிரவைத்தது. உறக்கத்தில் இருந்த மக்கள் துடித்தெழுந்து குண்டுச் சத்தங்கள் கேட்கும் திசைகளைப் பார்த்தவாறு திகிலுடன் காணப்பட்டனர்.

திடீரென இடம் பெற்ற பயங்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் கைதாகிப் பின்னர் விடுதலை

(பருத்தித்துறை)

வடமாராட்சிப் பாடசாலைகளில் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலை மாணவர்கள் 11 பேரை இராணுவம் கைது செய்து விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப் பட்ட இந்த மாணவர்கள் அனைவரதும் பாடசாலை வரவை மூன்று மாதத்திற்கு அவதானித்து அது பற்றிய விபரத்தை அனுப்பி வைக்குமாறும் அம்மாணவர்களை பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை இரா

(8ஆம் பக்கம் பார்க்க)

### பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ்

## கைதுசெய்யப்பட்ட "செல்வத்தை" 8ம் திகதி செவ்வாய் ஆஜர்படுத்தவும்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த செல்வம் என்பவர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் யாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்கினராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

ஆஜர் செய்யப்பட்ட செல்வத்தை நீதிவான் இ. த. விக்கினராசா 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆஜர் படுத்துமாறு உத்தரவிட்டார்

## அனாமதேய தொலை பேசி அழைப்பு வவுனியா செயலகத்தை கலக்கியது!

(வவுனியா)

வவுனியா அரச செயலகத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த செய்தியை அடுத்து அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்று நண்பகல் 11.30 மணியளவில் அரச செயலக தொலை பேசி இயக்குநருக்கு வந்த அனாமதேய தொலை பேசி அழைப்பிலேயே அரச செயலகத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவியது.

இச் செய்தியை அடுத்து உடனடியாக அரச செயலக அதிகாரிகளும் ஊழியர்களும் பொதுமக்களும் செயலகத்தை விட்டு வெளியேறியதுடன் இராணுவத்தினர் செயலகத்தை சோதனையிட்டனர்.

சுமார் 2 மணி நேரம் நீடித்த சோதனையில் குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்பட

[8 ஆம் பக்கம் பார்க்க]

### வவுனியாவில் ஜனவரியில் மட்டும்

## 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் இருவரைப் பற்றிய தகவல் எதுவுமில்லை

(வவுனியா)

கடந்த ஜனவரி மாதத்தில் மட்டும் வவுனியாவில் 29 பேர் கைது செய்யப்பட்டு காணாமல்போனது தொடர்பாக தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் எஸ். சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இவர்களில் 27 பேரின் விபரம் தெரியவந்துள்ளதாகவும், அவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார் மேலும் பூந்தோட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பெருமாளை கட்சியிலிருந்து நீக்க கொழும்பு நீதிமன்றம் நேற்றுத் தடை

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்து நீக்கியதாக சுரேஸ் பிரேமச்சந்திரன் அறிவித்ததற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

அவ்வுத்தரவில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினராக வரதராஜப்பெருமாள் தொடர்ந்து செயற்படும் விடயத்தில் பிரேமச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தகவல்திணைக்கள பணிப்பாளர் அனுமதி இன்றி தகவல்களை வெளியிடக்கூடாது

அரசாங்கத்தின் செயற்பாடுகளையும், நடவடிக்கைகளையும், பற்றி எந்த ஒரு அதிகாரியும் அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளரின் அனுமதி இன்றி தகவல் எதனையும் வெளியிடக்கூடாது.

நேற்று தகவல் திணைக்களத்தில் மாவட்டச் செயலாளர்களுக்கான தகவல் தொடர்பு அதிகாரிகளை நியமித்து கடிதம் வழங்கும் வைபவத்தில் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவிக்கப் பட்டது.

## மூன்று புலிகள் உயிரிழந்தனர்

கடந்த 23ஆம்திகதிகட்டைஅடம்பனில்நடந்தமோதலில் 3போராளிகள்உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு-

★ அரங்கநாதன் (சூசைநாயகம் நிக்ஷன் பிரகாஸ்) மன்னார்.

★ சுகுணன் (இராசரட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பாண்டியன்தாழ்வு சம்பவத்தில்

## படையினரின் சூட்டுக்கு இலக்காகியவரின் சடலம் அடையாளம் காணப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

பாண்டியன் தாழ்வுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமாகியதாகக் கருதப்படும் நபருடைய சடலம் இது வரை பிரேதப் பரிசோதனை செய்யப்படவில்லை என யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச் சடலத்தை எவரும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# நமது மண்ணில் அகதிகளாக்கப்படும் மக்களின், துயர் நீக்கப்பட வேண்டும்

## ஈ.பி.ஆர்.எல். எவ். கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பகலில் சொந்த வீடு, இரவில் இரவல் வீடு என வருமானம இழந்து அலைவதேடு சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டு, வாழ்கின்ற மக்களின் துயரத்தை துடைக்க அரசும், விடுதலைப்புலிகளும் முன்வர வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

தொடரும் பதற்ற நிலையால் குடாநாட்டு மக்களது அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டது தொடர்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பாக தம்பிராசா சுபத்திரன், மனுவல் மங்களநேசன் ஆகியோர் கூட்டாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தவிற்கு அனுப்பிய அவசர செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கடந்த இரண்டு மாத காலமாக யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளான குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, கோவிலாக்கண்டி, மறவன்புலோ, தனங்களப்பு மற்றும் கச்சாய் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் படும் அவலங்களை நாம் கண்டும் கேட்டும், உணர்ந்தும் உள்ளோம்.

இராணுவம் வடபுலத்தைக் கைப்பற்றிய பின்னர் கைதுகள், சோதனைச் சாவடிகள், மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடி, யாழ். கொழும்பு பயணக்கெடுபிடிகள் போன்ற அசௌகரியங்களுக்கு மத்தியிலும் சுயமாக தொழில் செய்து தமது குடும்பத்தைக் காப்பாற்றும் மன நிறைவோடு வாழ்ந்து வந்தனர்.

கடந்த இரண்டு மாத காலமாக கரையோரப்பகுதிகளை நோக்கி ஏவப்படும் ஷெல் தாக்குதல்களால் பொது மக்கள் இறந்தும், ஊனமுற்றும், இடம்பெயர்ந்தும் உள்ளனர். இவ்வாறு சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமையால் அவர்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடலில் வலைகளை விரித்த மீனவர்கள் அவற்றை மீள எடுத்து வரமுடியாமல் அவதிப்படுகின்றனர். அண்மைக்கால ஷெல் தாக்குதல்களால் தொழிலுக்கு செல்ல முடியாமல் ஜீவனோபாயத்திற்கே வழியறியாமல் நிற்கும் இவர்கள் இப்போது தமது தொழில் செய்யும் உபகரணங்களையும் இழந்து கையறு நிலையில் உள்ளனர்.

கையிலிருந்ததை எல்லாம் வயல் வேலைகளுக்காக செலவு செய்த விவசாயிகள், வயலில் விளைந்த நெல்லை உரிய காலத்தில் அறுவடை செய்ய முடியாமல் தமது கண்ணெதிரிலேயே அவை பாழடைவதை பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதனால் வயல் வேலைகளில் ஈடுபட்டு அன்றாடம் உழைத்து ஜீவிக்கும் கூலித் தொழிலாளர்களும் தொழில் இழந்து அல்லல்படுகின்றனர். மக்கள் இடம் பெயர்ந்து இரண்டு மாதங்களாகின்ற போதிலும் ஒரு தடவை மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கம் வழங்கும் நிவாரண உதவிகள் துரிதமாகக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் மீனவர்கள் கடலில் விரித்த வலைகளை மீளப்பெறுவதற்கு கூடிய விரைவில் உரிய கால அவகாசம் அளிப்பதோடு, விவசாயிகள் தமது வயல்களில் விளைந்த நெல்லை அறுவடை செய்வதற்கும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

புலிகளின் ஷெல் தாக்குதலை காரணங்காட்டி மக்களின் ஜீவாதாரமான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை தள்ளிப் போட வேண்டாமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்ட சங்க பொதுக் கூட்டம்

(கரணவாய்)

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் சங்கத் தலைவர் திரு. டி. எம். வேதாபரணம் தலைமையில் கடந்த 30 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

நடப்பாண்டு நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் டி.எம். வேதாபரணம், செயலாளர் தி. வரதராசா, பொருளாளர் க. முருகதன், பிரதித்தலைவர் மா. நவநீதமணி, உபதலைவர் வே. கமலநாதன், பொ. வியாகேசு, இ. தமிழ்மாறன், க. முருகவேள், சி. சதீர்காமராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மைதான அலுவலராக தி. திருஞானசேகரன் தெரிவு செய்யப்பட்டார். (க-27)

## பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலைக்கென தென்பகுதிவாசி 50,000 நன்கொடை

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் நூலகம் விஞ்ஞான ஆய்வு கூடம் என்பனவற்றின் அபிவிருத்திக்கென கொழும்பு ராஜகிரியாவில் வசிக்கும் நலன் விரும்பியான பிரசன்னா டபிள்யூ. ஜயவர்த்தன 50,000 ரூபாவை அனுப்பி வைத்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வடக்குத் தெற்கு இணைப்பு உறவுப் பாலத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த தென்னிலங்கை இளைஞர் யுவதிகளுடன் வருகை தந்த பத்திரிகையாளர் குழு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கும் விஜயம் செய்திருந்தது.

இத் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் இப் பாடசாலையில் மாணவர்களின் கல்வி கற்பதற்குள்ள குறைபாடுகள் அவர்களது தேவைகள் பற்றி பத்திரிகையில் செய்திகள் பிரசுரித்திருந்தனர். இச் செய்திகளை வாசித்த இந் நலன் விரும்பி இப் பாடசாலையின் நூலகம், விஞ்ஞான ஆய்வு கூடங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான இவ் 50,000 ரூபாவுக்கான காசோலையை பாடசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார். (க-52)

## இராசிபலன்

02.02.2000 புதன்கிழமை
(தமிழுக்கு தை 19)

துவாதசி பகல் 2.29 வரை; மூலம் மாலை 3.27 வரை, மரணயோகம், இராகு காலம் பகல் 1.06 முதல் 2.34 வரை. சுபநேரம் மாலை 5.35 முதல் 7.05 வரை, பிரதோசவிரதம்.

**மேடம்:** கருத்து வேறுபாடு, அதிக வேலை, அலைச்சல்.

**இடபம்:** தொழில் வழிப்பகை, மனக்குறை, யோசனை.

**மிதுனம்:** தனலாபம், புதிய திருப்பம், மனமகிழ்ச்சி.

**கடகம்:** மனைவி பெருமை, காரிய சித்தி, கடித உறவு.

**சிங்கம்:** பணவழிக் கவலை, புத்திரர் சங்கடம், வெறுப்பு.

**கன்னி:** வாய்ச்சண்டை, வேறுபாடு, தவறான போக்கு.

**துலாம்:** பணத்தட்டுப்பாடு, இடமாற்றம், குறை கேட்டல்.

**விருச்சிகம்:** பரிந்து பேசுதல், குடும்ப வேற்றுமை, உபத்திரவம்.

**தனுசு:** பொருள் லாபம், நண்பர் மகிழ்ச்சி, நினைத்தது கைகூடல்.

**மகரம்:** முட்டுக்கட்டை, குழப்பமடைதல், அயலவர் பகை.

**கும்பம்:** வாக்குத்தவறுதல், விதண்டாவாதம், உடல் சோர்வு.

**மீனம்:** சமரச முயற்சி, அதிகாரி பாராட்டு, உற்சாகம்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா


### தாம்பத்திய வாழ்வில் பொன் விழா

02 - 02 - 2000

**திரு. கோ. தியாகராசா**
(இளைப்பாறிய தபால் அதிபர்)

**திருமதி தி. நாகரத்தினம்**

தாம்பத்திய வாழ்வில் பொன்விழாக்காணும் இனிய தம்பதியினர் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்பும் பெற்று இறைதொண்டு, சமூகத்தொண்டுமாற்ற எல்லாம்வல்ல் ஞான செல்வ விநாயகரை வேண்டி நிற்கும்.

துரைசிங்கம் சோமசுந்தரம் குடும்பம்,
துரைசிங்கம் தனபாலசிங்கம் குடும்பம்.

சேச் லேன்,
கொக்குவில்.



### வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

### கேள்வி விபரம்

2000 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிவரை பாலர் பாடசாலை மாணவருக்கான வாங்குடன் இணைந்த மேசைகள் தயாரித்து விநியோகிப்பதற்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் முற்பகல் 10.30 மணியளவில் கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம். கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 100/- ஐயும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 200/- ஐயும் 10.02.2000 நண்பகல் 12.00 மணிவரை வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை, தலைமை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**சி. பசுபதி**
செயலாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி.

27.01.2000 (கி/46)


# மாணவர்கள் கல்வியைத் தொடர உடன்நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

பாடசாலையில் கல்வி கற்கும் 12 வயது மாணவனைப் பாடசாலையில் வைத்தும், மாணவியை வீட்டில் வைத்தும் பாடசாலை அதிபர்களுக்குத் தெரியாமல் பொலிஸாரினால் கைது செய்ததைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட மாணவனையும் மணவியையும் உடன் விடுதலை செய்து இதன் தொடர்பாக பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள மாணவர்களை அதனைக் கைவிட்டு அவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று எவ்வித தடங்கல்களுமின்றிக் கல்வியைத் தொடர ஆவன செய்யும் வண்ணம்''

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதியும் வடமாகாண அதிபர் சங்கத்தின் பிரதிநிதிகளும் அச்செழுவில் உள்ள வடமாகாண இராணுவத் தலைமை முகாமில் வடமாகாண இராணுவத்தளபதி பிரிகேடியர் காமினி ஜெயசுந்தராவைச் சந்தித்து மேற்கண்டவாறு கேட்டுக்கொண்டனர்.

இத்தூதுக் குழுவினர் இரண்டு மாணவர்களின் கைதினால் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் மாணவர்களின் வரவின்மையால் செயல் இழந்துள்ளன என்றும், இத்தகைய கைதுகள் எதிர்காலத்தில் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும், கைதுசெய்யப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் விடுதலைப் போராட்டத்தோடு தொடர்புடையவர் என்பதற்காக அக்குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களின் கல்விக்கு இத்தகைய கைதுகளினால் தடை ஏற்படுத்துவது மனித உரிமை மீறல் என்றும், இக் கைதுகளினால் மற்றைய மாணவர்களின் கல்விக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், இம்மாணவர்களின் தாயாரிடமிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலமாக அல்லது சர்வதேச செய்தி ஊடகவியாலாளரூடாக சுயாதீனமான முறையில் இம்மாணவர்களின் கைது தொடர்பாக ஏற்பட்டுள்ள நிலை குறித்து உண்மைத்தகவல்களைப் பெற்று செய்தி ஊடகங்கள் மூலமாக பகிரங்கப்படுத்த வேண்டும் எனவும்கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. இக் கோரிக்கைகள் ஜனாதிபதிக்கும் கல்வி அமைச்சருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

வருங்காலத்தில் இத்தகைய கைதுகள் இடம் பெறாமல் இருக்க தான் நடவடிக்கை எடுப்பதாகவும் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களை கைது செய்ய சந்தர்ப்பம் ஏற்படும் பட்சத்தில் பாடசாலை அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்து அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரிகேடியர் உறுதிமொழி வழங்கினார்.

இத்தூதுக் குழுவில் இ. த. ஆ. சங்கத்தின் சி. து. பொ. செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் வடமாகாண அதிபர் சங்கத்தின் தலைவரும் யா/மத்திய கல்லூரி அதிபருமாகிய திரு. க. இராசதுரை, வ. அ. சங்கத்தின் செயலாளரும் யா/வயாவிளான் ம.ம. வித்தியாலய அதிபருமாகிய திரு. ஆ. நடராசா, யா/வயாவிளான் ம.ம. வித்தியாலய உப அதிபர் திரு. சி. மணியம் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இராணுவத்தின் தரப்பில் பிரிகேடியர் காமினி ஜெயசுந்தர, கேணல் அத்தநாயக்கா ஆகியோர் பங்குபற்றினர். (வ)


ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
புதிய வெளியீடு
விஜயகாந் (இரட்டை வேடம்)
பிரபு தேவா, மீனா
நடித்த
**வானத்தைப் போல**
(CD பிரதி)
(சிறந்த குடும்பச் சித்திரம்)
காட்சிகள்
10. 30, 2. 30 (ப.நே)
(00115)

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார்
தேவயானியின்
**சூரிய வம்சம்**
(ரீல்ஸ்)
11:00-2:30 (பு.நே)
(00116)

யாழ்ப்பாணம்

# இஸ்ரேலிய இராணுவ 2வது தளபதி தெற்கு லெபனானில் கொலை

## ஹிஸ்புல்லா குழு தெரிவிப்பு

(ரெல் அவிவ்)

இஸ்ரேலிய இராணுவத்தின் இரண்டாவது தளபதியை தெற்கு லெபனானில் வைத்துக் கொன்று விட்டதாக லெபனானில் இயங்கும் ஹிஸ்புல்லா குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பில் இருக்கும் தெற்கு லெபனானின் கிராமம் ஒன்றில் குண்டுத் தாக்குதல் மூலம் இந்த இராணுவத் தலைவரை தாம் கொன்றுள்ளதாக ஹிஸ்புல்லா அமைப்பு குறிப்பிட்டதுடன்,

இதனை உறுதிப்படுத்தும் முகமாக தமக்குச் சொந்தமான தொலைக்காட்சியில், கொல்லப்பட்ட இஸ்ரேல் இராணுவத் தலைவரின் சடலத்தினை காட்டியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(க-9)

# இராணுவத் தளபதி மிரான்டோ உட்பட 24 இராணுவ அதிகாரிகள் குற்றவாளிகள்

(ஜகார்த்தா)

கிழக்குத் தீமோர் சிறிநகர் நிலைய உரிமை வாக்களிப்பின் போது இந்தோனேசிய படைகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளின் குற்றவாளிகளாக இந்தோனேசிய தலைமை இராணுவத் தளபதி மிரான்டோ உட்பட 24 இராணுவ அதிகாரிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு ஆகஸ்டில் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்ட விசேட மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகளின் போதே இவர்கள் இனம் காணப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இக் குற்றவாளிகளை எதிர்காலத்தில் நீதி விசாரணைகளுக்கும் உட்படுத்தி தண்டனை வழங்கப்படும் என ஆணைக்குழு அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(க)

## 300 டாங்கிகள் கொள்வனவு

(புதுடில்லி)

இந்தியா இவ்வருடம் குறைந்த பட்சம் 300 யுத்த டாங்கிகளையாவது ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ளதாக இந்திய பாதுகாப்பு உயர் அதிகாரிகள் ெரிவித்துள்ளனர்.

## பஞ்சாப் மாநில சம்பவத்தில் 18பேர் துடிதுடித்துப் பலி

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தின் லூர்ஜியானா மாவட்ட நெடுஞ்சாலையில், ஏற்பட்ட எதிர்பாராத சம்பவத்தில் 18 பேர் அந்த இடத்திலேயே துடிதுடித்து பலியாகினர்.

நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த கனரக வாகனத்தில் அடுக்கப்பட்டிருந்த சீனி மூடைகள், அருகில் வந்துகொண்டிருந்த இரு மோட்டார் வண்டிகளின் மீது வீழ்ந்ததில், மோட்டார் வண்டியிற் பயணம்செய்த 6 பெண்கள், 4 குழந்தைகள் உள்ளிட்ட பதினெட்டுபேர் உயிரிழந்தனர்.

இவர்களில் 11 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேற்படி சம்பவத்துக்குக் காரணமான சீனிமூடைகள் அடுக்கப்பட்டிருந்த கனரக வாகனத்தின் சாரதி தலைமறைவாகிவிட்டதாகவும், பொலிசார் அவரை தேடிவருவதாகவும் தெரிய வருகிறது.

(க-9)

## பாக். அதிபருடன் பேச்சுநடாத்த தலிபான் துணைத்தலைவர் நேரில் விஜயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஸாரப்புடன்சந்திப்புக்களைநடத்துவதற்காகதலிபான்துணைத் தலைவர் முகமதுறக்பாளியும் மேலும் 18 உயர் நிலை அதிகாரிகளும் அண்மையில் இஸ்லாமபாத்திற்கும் சென்றுள்ளனர்.

சர்வதேச ரீதியில் தலிபான் தனிமைப்படுத்தப்படுவது குறித்து இச்சந்திப்பின் போது ஆராயப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

(க-7)

**மலேசிய**

## முன்னாள் நிதியமைச்சர் மீதான விசாரணைகள் மீண்டும் தொடங்கின

(கோலாலம்பூர்)

முன்னாள் மலேசிய நிதி அமைச்சர் அன்வர் இப்ராஹிம் மீதான பாலியல் துஷ்பிரயோக வழக்கின் விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த அன்வரின் விசாரணைகள் மீண்டும் கடந்த செவ்வாயன்று நடைபெற்றது.

வழக்கு விசாரணைகளுக்காக அன்வர் இப்ராஹிம் நீதி மன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட போது அன்வரின் ஆதரவாளர்கள் நீதிமன்றத்துக்கு வெளியே அன்வரை விடுவிக்கக் கோரி அரசைக் கண்டித்து ஆர்பாட்டம் செய்ததாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(கு)

**ஐ. நா. ஆயுதக்கண்காணிப்புக் குழுவின்**

## ஈராக்குக்கான புதிய தலைவராக 'ஹான்ஸ் பிலிக்ஸ்' நியமனம்!

(ஈராக்)

ஈராக்குக்கான ஐக்கியநாடுகளின்ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக சுவீடனைச் சேர்ந்தசர்வதேச அணுசக்தி அமைப்பாளராகக் கடமையாற்றும் ஹான்ஸ்பிலிக்ஸ் ஐ.நா,பாதுகாப்புச்சபையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பலவாரகாலமாக இருந்து வந்த இழுபறிகளின் முடிவில்' பலத்த எதிர்ப்புக்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் ஹான்ஸ் பிலிக்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த முடிவைத் தாம் ஏற்கப் போவதில்லை என்றும் எந்தஒருவரையும்ஆயுதக்கண்காணிப்புக்காக பக்தாத்தினுள் நுழைய அனுமதிக்க முடியாது என்றும் ஈராக் அரசு கண்டிப்பாகக் கூறியுள்ளது.

இதேவேளை,

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டதலைவர் எப்படிப்பட்டவராகிலும், அமெரிக்கா திட்டமிட்டு நடைமுறைப் படுத்தும் திட்டங்களில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தப் போவதில்லை என ஐக்கிய நாடுகளிற்கான ஈராக்கிய பிரதிநிதி சாயீட்ஹசன் தெரிவித்துள்ளார்.

(கு-9)

**உலக வலம்**

**இந்திய விமானக் கடத்தல் விவகாரம்**

# அரசுக்கு எதிரான வழக்கை உயர்நீதிமன்றம் நிராகரித்தது

இந்திய விமானக் கடத்தல் விகாரத்தில் 3தீவிர வாதிகளை விடுவித்த செயலைக் கண்டித்து தொடுக்கப்பட்ட வழக்கை இந்திய உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கடந்த வருட இறுதியில் காத்மண்டுவில் இருந்து புறப்பட்ட இந்தியாவிற்குச் சொந்தமான பயணிகள் விமானத்தை முஸ்லிம் தீவிரவாதிகள் கடத்தியது —

**நூற்றுக்கணக்கான பயணிகளை விடுவிக்கும் பொருட்டு இந்தியச் சிறையில் தடுத்து** வைக்கப்பட்டிருந்த 3தீவிரவாதிகளை கடத்தல் காரரின் கோரிக்கைக்கு இணங்கி இந்திய அரசு விடுவித்ததும் அறிந்ததே.

இந்தச் செயலைக் கண்டித்து இந்தியக் குடிமக்களின் நலன் கருதி தொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் மேற்படி வழக்கை 3நீதிபதிகள் அடங்கிய குழு நிராகரித்து விட்டதாகவும்—

பயங்கரவாதக் குற்றத்திற்காக இந்தியச் சிறைகளில் கடுங்காவல் தண்டனைவிதிக்கப்பட்டிருந்த தீவிரவாதிகளை விடுவிக்கும் அதிகாரம் அரசுக்குக் கிடையாது என்ற வழக்குத் தொடுத்தவர்களது வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் தெரியவருகிறது.

அத்துடன் விமானக் கடத்தல் போன்ற நெருக்கடிக் காலங்களில் என்ன முடிவெடுப்பது என்பதில் அரசாங்கத்திற்கு மட்டுமே பூரண உரிமை உண்டு. தனிப்பட்டவர்கள் இவ் விடயத்தில் தலையிடவோ அல்லது கருத்துக் கூறவோ உரிமை ஏதும் கிடையாதென வழக்குத் தொடுத்தவர்களிடம் தெளிவாக நீதிபதிகள் கூறிவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றனர்.

(க-9)

## அமெரிக்கா தயாரித்த இந்தோனேஷிய செய்மதியை ரஷ்யா விண்ணுக்கு ஏவும்!

அமெரிக்கத் தயாரிப்பான இந்தோனேஷிய தொலைத் தொடர்புச் செய்மதி ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி ரஷ்யாவிலிருந்து விண்வெளிக்கு ஏவப்படவுள்ளது.

முன்னர் இந்த செய்மதியை விண்ணில் ஏவுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாகப் பலனளிக்காது கைவிடப்பட்டிருந்தது.

தற்போது திருத்த வேலைகள் முடிவுற்ற நிலையில் இந்தச் செய்மதி விண்ணுக்கு அனுப்பப்படவுள்ளது. (கு)

# பிரிட்டனின் குடிநுழைவு தொடர்பாக இந்தியா எச்சரிக்கை விடுப்பு

(புதுடில்லி)

பிரிட்டனுக்குள் நுழைய விரும்பும் இந்தியர்கள் 16 ஆயிரம் டொலர் பிணைப் பணம் செலுத்த வேண்டும் என்ற முன்னோடித் திட்டம் செயற்படுத்தப்பட்டால் அதே வழியைத் தானும் கடைப்பிடிக்க வேண்டி வரும் என இந்தியா பிரிட்டனை எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் ஒரு நாட்டின் குடிநுழைவுத் துறை சட்ட திட்டங்கள் உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் பாரபட்சமற்றதாக இருக்க வேண்டும்.

இதை விடுத்து நாட்டிற்கு நாடு குடிநுழைவுத்துறை சட்ட திட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவது ஏற்புடையதன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் வருகை அனுமதியில் பிரிட்டனுக்கு வரும் ஆசிய நாட்டவர்கள் சிலர் அனுமதியின்றி தொடர்ந்து பிரிட்டனில் தங்கி விடுவதான கள்ளக் குடியேற்ற முறையை தடுக்கும் பொருட்டு இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து பிரிட்டன் வரும் பயணிகளிடமிருந்து பிணைப் பணம் வசூலிக்கத் திட்டமிடப்பட்டிருப்பது தெரிந்ததே.

## ஹஜ்யாத்திரையின் போது காஸ் சிலிண்டர் பயன்படுத்தத் தடை

(றியாத்)

இவ்வருடம், ஹஜ் யாத்திரிகர்கள் காஸ் சிலிண்டர்களை பயன்படுத்தக் கூடாது என சவூதி அரேபிய அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

யாத்திரைக்கு வரும் பயணிகளுடைய வாகனங்கள் பரிசோதனை செய்யப்பட்டு காஸ் சிலிண்டர்கள் கண்டு பிடிக்கப் பட்டால் அவை பறிமுதல் செய்யப்படுவதுடன் அபராதமும் விதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நடைமுறை மார்ச் 11 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

1997ஆம் ஆண்டு ஹஜ் யாத்திரையின் போது ஏற்பட்ட விபத்து ஒன்றில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கூடாரங்கள் எரிந்து நாசமாகியதும் 343 பேர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

(க-9)

## மலேசியாவில் ஆர்ப்பாட்டக் காரர்கள் கைது

(கோலாலம்பூர்)

மலேசியாவில் அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்த 6ஆர்ப்பாட்டக்காரர் களை மலேசியப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

முன்னாள் நிதியமைச்சர் அன்வர் இப்ராகிம் மீதான பாலியல் துஷ்பிரயோக வழக்கு விசாரணை நடைபெற்ற நீதிமன்றத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(கு)

# பயங்கரவாதச் செயல்களினால் சீனாவில் ஐவருக்கு மரணதண்டனை

(பீஜிங்)

பயங்கரவாதச் சந்தேக நபர்கள் ஐந்து பேருக்குச் சீனாவிலுள்ள சின்ஜியாங் என்னும் இடத்தில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம், சட்டவிரோத ஆயுதக் கடத்தல், கொலை முதலிய குற்றச் செயல்களில் ஈடுபட்டுவந்த எவுகெட் மஃமுத் என்பவர் தலைமையிலான பயங்கரவாதக் குழுவைச் சேர்ந்த ஐவருக்கே இவ்வாறு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

உரும்கியிலுள்ள நீதிமன்றத்தில் மேற்படி ஐந்து பேருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டதோடு இரண்டு பேருக்கு ஆயுட்காலச் சிறைத் தண்டனையும் வேறு சிலருக்கு 6 மாத கால கடூழியச் சிறையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

(கு)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள்

## வினா இல. 3

**இப்பந்தியின் பிரகாரம் கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் (R) எனவும் பிழையாயின் (W) எனவும் எதிரே உள்ள கோட்டினுள் எழுதுக.**

(1) உணவு தயாரிக்க நீர், வளி என்பன பயன்படும். ................

(2) சந்திரன் சூரியன் என்பன மூலச்சக்தி மூலகங்களாகும். ................

(3) சில தாவரங்கள் பூச்சிகளை உணவாகக் கொள்கின்றன. ................

**கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

(4) அழகனுக்கு அழகி என்பதுபோல் கணவனுக்கு ................................ ஆவாள்.

(5) நான் உங்கள் சூழலில் உள்ள நீங்கள் வீசும் கழிவுகளை உண்டு வாழ்கின்றேன். இதனால் என்னை 'நகர சுத்திகரிப்பான்' எனவும் அழைப்பார்கள். ஆயினும் நன்றி கெட்ட மனிதர் என்னையே உணவாகக் கொண்டனர். ஆனால் இப்போதோ நான் நோய் பரப்புவதாகக் கூறி என்னை அழிக்கின்றனர். என்னைத் தெரிகின்றதா? தெரிந்தால் என் பெயரை எழுதுங்கள்.

....................................................................ஊீ......

(6) ஒரு மோட்டார் சைக்கிளில் 2 லீற்றர் பெற்றோலில் 80 கிலோ மீற்றர் தூரம் செல்லலாம். எனவே, ஒருவன் 400 கிலோமீற்றர் தூரம் செல்ல உள்ளான். அவனுக்கு எவ்வளவு பெற்றோல் தேவைப்படும்?

................................................................................

(7) LX—XL இனை சுருக்கி பெறுமானத்தை இந்து அராபிய இலக்கமாக எழுதுக?

................................................................................

(8) ''அகட விகடம்'' இச்சொல்லில் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஒரு எழுத்து மீண்டும் எழுதப்படா வண்ணம் எழுதி புதிய சொல்லொன்றை எழுதுக?

................................................................................

**சரியான விடையின் கீழ்க கோடிடுக.**

(9) இலங்கையில் மின் உற்பத்திக்குப் பயன்படும் இயற்கை வளம்?
(1) சூரியவெப்பம் (2) காற்று (3) நீர்

(10) pa...lo...ns இல் இடைவெளிக்குப் பொருத்தமான எழுத்துக்கள் முறையே?
(1) o, l (2) l, o (3) l, a

(11) இலங்கையில் பயன்படுத்தப்படும் நாணயங்களில் பூ வடிவ ஓரம் உடைய நாணயம்?
(1) ரூபா 2.00 (2) ரூபா 1.00 (3)சதம் இரண்டு

(12) கீழ்வரும் சொற்களில் வேறுபாடான சொல்?
(1) இரத்தம் (2) சிவப்பு (3) குருதி

(13) மோப்பசக்தியுடையதும் காவல்துறையினர் பயன்படுத்துவதுமான ஒரு விலங்கு?
(1) யானை (2) குதிரை (3) நாய்

(14) நீரைத் தூய்மையாக்க கிணற்றினுள் போடப்படும் இரசாயனப் பவுடரின் பெயர்?
(1) யூரியா (2) குளோரின் (3) மலத்தியோன்

(15) இலங்கையின் தலைநகரம்?
(1) யாழ்ப்பாணம் (2) கொழும்பு (3) கிளிநொச்சி

**16 - 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட சொற்களில் ஒன்று ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது வேறுபடும் சொல்லின்கீழ்க் கோடிடுக.**

(16) (1) கத்தி (2) கோடரி (3)வாள் (4) சுத்தியல் (5) அரிவாள்
(17) (1) தை (2) பங்குனி (3) ஞாயிறு (4) மார்கழி (5) சித்திரை
(18) (1) இரண்டு (2) ஐந்து (3) நான்கு (4) ஆறு (5) எட்டு
(19) (1) கிளி (2) காகம் (3) மைனா (4) பூனை (5) கொக்கு
(20) (1) புத்தகம் (2) பேனா (3) பிளேற் (4) பென்சில் (5) அடிமட்டம்

ஆக்கம் - சுந்தர்

### கல்விப்பகுதி வினா இல. 3

"வலம்புரி"
இல, 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..................................

சொந்த முகவரி: ..................................

கற்கும் பாடசாலை: ..................................

மாணவர் கையொப்பம்: ..................................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளை தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

# புலமைப் பரீட்சை வினா இல 2 விடைகள்

(1) — (2) (6) — மகள் (11) பிழை
(2) — (3) (7) — நாகமரம் (12) சரி
(3) — (3) (8) — xx (13) பிழை
(4) — (2) (9) — ரூபா 3.50 (14)சரி
(5) — (2) (10) கன்று (15) சரி
(16) — (3)
(17) — (4)
(18) — (2)
(19) — (2)
(20) — (3)

## ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை வினா இல - 02

அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம்

(1) ஜே. மேரிறதனி யாழ். கன்னியர் மடவித்தியாலயம்.
(2) ப. பார்த்தீபன் ஸ்ரீ கணேச வித்தியாலயம், சித்தங்கேணி.
(3) ச. பிருந்தா திருநெல்வேலி. இந்துக்கலவன் பாடசாலை.
(4) க. குகதாசன் யாழ்/ஏழாலை புனித இ.சிதோர் றோ.க. பாடசாலை.
(5) ந. சிவசங்கர் யாழ். மத்தியகல்லூரி.
(6) கி. ஜனகன் அச்சுவேலி, சரஸ்வதி வித்தியாலயம்.
(7) ச. சிந்துஜா கொக்குவில், இந்து ஆரம்பப் பாடசாலை.
(8) சி. அன்ரன்தேவகுமார்சிரான்கேசன் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(9) த. துளசிகா கொக்குவில், இந்து ஆரம்ப பாடசாலை.
(10) சி. பிரதாப் கிளி. பளை, மத்திய கல்லூரி.
(11) சு. அபிராமி கிளி. பளை, மத்திய கல்லூரி.
(12) ச. ஷாமளை யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
(13) தி. கிருபராஜ் யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.
(14) இ. நாகறஞ்சன் யாழ். கொட்டடி, நமசிவாய வித்தியாலயம்.
(15) தெ. பரந்தாமன் தொல்புரம், அ.மி.த.க. பாடசாலை.
(16) நி. சரணியா கொக்குவில், இந்து ஆரம்பப் பாடசாலை.
(17) யோ. கம்சன் யாழ். பரியோவான் கல்லூரி.
(18) செ. றெனாபியூலா யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலயம்.
(19) சி. சுஜியந்தன் அரியாலை, ஸ்ரீபார்வதி வித்தியாலயம்.
(20) கெ. சுகன்ஜா யாழ். புனித பொஸ்கோ ம.வி.
(21) ப. லக்சிகா யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(22) செ. லோஜினி யாழ். மகாஜனாக் கல்லூரி.
(23) கு. யுவறாஜ் யாழ். மகாஜனாக் கல்லூரி.
(24) கு. பகீரதன் யாழ். திருநெல்வேலி இ.த.க. பாடசாலை.
(25) ஆ. கலைச்செல்வி யாழ். மாதகல், சென்யோசவ் மகா வித்தியாலயம்.
(26) வி. சுஜந்தா யாழ். இந்து தமிழ் கலவன் பாடசாலை.
(27) கோ. அர்ச்சுனன் யாழ். சாவகச்சேரி, இந்து ஆரம்பப் பாடசாலை.
(28) ச. யாழினி யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.
(29) சூ. மேரி தேவான்சலின் யாழ். புனித மரியாள் வித்தியாலயம்.
(30) கு. ஜீவிதா யாழ். பண்டத்தரிப்பு, ம.உ. கல்லூரி.
(31) கி. சுகதீபன் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(32) பு. லக்ஷிகா யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.
(33) பா. மீராஜி யாழ். இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.
(34) த. கஸ்தூரி யாழ் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.
(35) சி. சுபாங்கி யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(36) சி.கோபிநாத் யாழ். சுதுமலை, சிந்மய பாரதி வித்தியாலயம்.
(37) அ. அலோஜிஸ் யாழ்.மெ.மி.த.க. பாடசாலை.
(38) சி. சிவகுமார் தி.வேலி அ.த.க. பாடசாலை.
(39) கு. பகீரதன் யாழ். திருநெல்வேலி இ.த்.க. பாடசாலை.
(40) சு. சுதர்சன் யாழ். மத்திய கல்லூரி.
(41) மு. சிவகுமாரன் யாழ். இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.
(42) ம. சௌதினிஜோய் யாழ். நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை.
(43) சி. சிவறஞ்சினி யாழ். தா.இ.த.க. பாடசாலை.
(44) த. டனிஹம்சானந் யாழ். புனித யோண் பொஸ்கோ.
(45) கி. துவாரகா யாழ். இ.ம.ஆ. பாடசாலை.
(46) ச. யனோசியா யாழ். திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.
(47) க. கபிலன் யாழ். நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை.
(48) நி. ஹரிலோஜினி யாழ். ஜோண் பொஸ்கோ.
(49) ஆ. சோபனா யாழ். அ.இ. கல்லூரி.
(50) ஜெ. நிஷாளினி கிளி. பளை மத்திய கல்லூரி.
(51) ஆ. சஞ்ஜியா யாழ். நாகர்கோயில் ம.வி.
(52) ச. விவேக் யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.
(53) சி. புவிசுதேஸ் யாழ். சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
(54) சி. துவாராக யாழ் மணிகாரன் தோட்டம் கரவெட்டி.
(55) சி. விஜேந்தினி யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.
(56) ப. றோஜிதா யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
(57) இ. மீதிலா யாழ். சென்யோண் பொஸ்கோ.
(58) த. சிவறஜனி யாழ். ஆ. நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
(59) நா. அனோஜினி யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.
(60) ம. அனோஜன் யாழ். வதிரி வடக்கு மெ.மி. தமிழ் வித்தியாலயம்.
(61) கோ. கிருஷாந்தி யாழ். இணுவில் மத்திய கல்லூரி.
(62) சி. டினோஷன் யாழ். உடுவில் மகளிர் கல்லூரி.
(63) இ. ரஜிவர்ணன் யாழ். கொ.இ.ஆ. பாடசாலை.
(64) ந. கஜீவன் யாழ். கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்.

## நிறுவுநர் தின விழா

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தின விழாவும், கல்லூரிச் சஞ்சிகையான ''தாமோதரன்'' நூல் வெளியீடும் எதிர் வரும் 5ம் திகதி சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கல்லூரி அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீட, பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் கலந்து கொண்டு ''உயர் பட்டப் படிப்புகளும் அதற்கான பீடமும்'' என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

## பயிற்சி நெறி

(ஊர்காவற்றுறை)

பாலர் கல்வித் திறனை மேம்படுத்தும் வகையில் போரூட் நிறுவனத்தினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர் வரும் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள இப் பயிற்சிக்குத் தகுதியானவர்களிடமிருந்து ஊர்காவற்துறை போரூட் நிறுவன வெளிக்கள உத்தியோகத்தர் விண்ணப்பங்களை கோரியுள்ளார். (க-75)

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண் கலைமாணி (இசை நாட்டியம்) 3-ம் வருடப் பரீட்சை முடிவுகளும் நுண் கலை மாணிப் பரீட்சை முடிவுகளும் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டதாக பதில் பதிவாளர் தெரிவித்தார். (க-7)

## இலவச கண்ணாடி வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் கண்பார்வை குன்றிய நூறு பேருக்கு இலவசக் கண்ணாடி வழங்கும் வைபவம், எதிர் வரும் 6ம் திகதி காலை 10.00 மணிக்கு கழகத்தின் தலைவர். எஸ். சந்திரகுமார் தலைமையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம. அதிதியாக லயன் டாக்டர். பீ. வி. தம்பித்துரை கலந்து கொண்டு, கண்ணாடிகளை வழங்கவுள்ளதாக கழகத்தின் செயலாளர். வீ. வீ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார். (க)

## கண்காட்சி

[மந்திகை]

வடமராட்சி கல்வி வலயத்தில் புதிய மிலேனிய ஆண்டை வரவேற்று கண்காட்சி ஒன்று நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இக் கண்காட்சி கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின் அடிப்படையில் நடைபெற இருப்பதாகவும், எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் கண்காட்சி நடைபெறவிருப்பதாகவும் தெரிய வருகின்றது. [க-23]

## விளையாட்டு அதிகாரி இடமாற்றம்

(அல்லைப்பிட்டி)

மகாஜனாக் கல்லூரியில் உடற்கல்வி போதனாசிரியராக கடமையாற்றி வந்த திரு. நா. லோகநாதன் இம் மாதம் தொடக்கம் தீவகக் கல்வி வலையத்தின் விளையாட்டு அதிகாரியாக நியமனம் பெற்றுள்ளார். (க-46)

# 9 ஜெனரேற்றர்கள் விரைவில் யாழ்ப்பாணத்திற்குகொண்டுவரப்படும்

(புலோலி)

யாழ். மாவட்ட மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்கு 09 ஜெனரேற்றர்கள் விரைவில் யாழ்ப்பாணம் கொண்டு வரப்படுவதற்கு உயர்மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நம்பகரமான தகவல்கள தெரிவிக்கினறன.

கூல் எயார் நிறுவனத்தில் இந்த ஜெனரேற்றர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் கப்பல் வசதி கிடைத்ததும் இவை யாழ்ப்பாணத்திற்குகொண்டு வரப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை யாழ்ப்பாணம் வந்ததும் குடாநாடு முழுவதும் 24 மணிநேர மின் விநியோகம் மேற்கொள்ள முடியும் என்றும் மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஜெனரேற்றரும் தலா ஒரு பெசோவாட் மின் சக்தியை உள்ளடக்கியது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-52)

# மாணவர்களின் கல்வித் திறனை வளர்க்க பேச்சு, கட்டுரை போட்டிகள் நடாத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கல்வித் திறனை ஊக்குவிக்கும் வகையில் இவ்வாண்டின் முற்பகுதியில் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, சித்திரப்போட்டி போன்றவற்றை நடாத்தி பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்குவதென அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற சிறுவர் உரிமைகள் மாவட்ட மட்ட கண்காணிப்பாளர் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சிறுவர் நலன்களுடன் சம்பந்தப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள் மற்றும் சிறுவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-14)

## இந்திய பத்திரிகை நிருபர்

# யாழ். மனித ஆணைக்குழு அதிகாரியை நேற்றுச் சந்தித்து பேச்சு நடாத்தினார்

(யாழ்ப்பாணம்)

புதுடில்லியில் இருந்து வெளிவரும் ''விஸ்னஸ் ராண்ட்'' பெண் பத்திரிகையாளர் அதித்தி பண்னிஸ் மேத்நா நேற்று யாழ். மனித ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வராவை சந்தித்து யாழ். நிலமை குறித்து கேட்டறிந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த இந்திய பத்திரிகையாளர் பண்னிஸ் மேத்தா மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது யாழ்ப்பாண நிலவரங்கள் குறித்தும் மக்களின் வாழ்க்கை நிலை குறித்தும் விரிவாக கேட்டறிந்துள்ளதுடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார். (க-14)

# இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த 29 ஆம் திகதி இரவு புத்தூர் கிழக்கு வாதரவத்தையைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கமலநாதன் என்ற இளைஞர் இனந்தெரியாத இரு ஆயுத தாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

சம்பவதினத்தன்று இந்த இளைஞர் இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணையின் பின் மறுநாள் 30 ஆம் திகதி அச்செழு இராணுவ முகாமிற்கு வருமாறு பணிக்கப்பட்டு பின்னர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இராணுவத்தினரின் பணிப்புரைக்கமைய மறுநாள் விசாணைக்காக அச்செழு முகாமிற்கு செல்லவிருந்த சமயமே முதல்நாள் இரவு இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இளைஞரின் தாயார் மனித உரிமை ஆணைகுழுவில் முறைப்பாடு செய்துள்ளார். (க-07-14)

## செஞ்சிலுவை பணியை

# பாடசாலைகள் மட்டத்தில் உருவாக்குவதற்கு முயற்சி

(இளவாலை)

பாடசாலை மட்டத்தில் செஞ்சிலுவைக் குழுக்களை உருவாக்கும் பணியினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பிக்க இருப்பதாகத் தெரியவருகின்றது.

இக்குழுவில் 18 வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்றலாம் என்றும் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஆகக் குறைந்தது 30 மாணவர்கள் பங்குபற்ற வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் முதற் கட்ட செயற்பாடு யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை பரப்புரை ஆரம்பிக்கின்றது என்றும் அறிய முடிகின்றது.

இந்த முயற்சி மூலம் செஞ்சிலுவைச் சங்கத்தினுடைய உருவாக்கம், சேவைகள் என்பவற்றை மக்கள் மத்தியில் புரிய வைக்க முடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் பாடசாலைகளில் அங்கத்தவர்களாய் சேரும் மாணவர்களுக்கு முதல் உதவிப் பயிற்சியை வழங்க இருப்பதாகவும் இதன் மூலம் தாங்களே அனாவசிய உயிர் சேதங்களை தடுக்க முடியும் என்றும் கூறப்படுகின்றது.

இதே வேளை ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைகள் மூலம் ஒவ்வொரு பாடசாலையிலும் இப் பரப்புரைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் மேலும் அறிய முடிகின்றது. [க-12]

# பழமரக் கன்றுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது

(மந்திகை)

புலோலி கமநல சேவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பழமாணியத் திட்டத்தின் கீழ் இப்பகுதி விவசாயிகளுக்கு பழமரக் கன்றுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

எலுமிச்சை, தோடை, மாதுளை, கொய்யா ஆகிய பழமரக் கன்றுகளையே மேற்படி திட்டத்தின் கீழ் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

விவசாயிகளின் காணிப் பரப்புகளுக்கேற்ப மேற்படி பழமரக் கன்றுகள் வழங்க இருப்பதாகவும் தெரிய வருகிறது.

பழமரச் செய்கையில் ஆர்வமுடைய புலோலி கமநல சேவை திணைக்களத்திற்கு உட்பட்ட விவசாயிகளை உடன் விண்ணப்பிக்குமாறு திணைக்கள அதிகாரி கேட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. (க-23)

# இள்வாலைக்கு புதிய மின்பிறப்பாக்கி பிரிட்டன் அன்பளிப்பு செய்துள்ளது

(இளவாலை)

இளவாலைப் பகுதிக்கு 250 மின்வலு கொண்ட புதிய மின் பிறப்பாக்கியை பிரித்தானிய அரசு அன்பளிப்பு செய்துள்ளது.

இப் புதிய மின்பிறப்பாக்கியை பொருத்துவதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

முன்பு இப் பகுதியில் பொருத்தப் பட்டிருந்த 56 மின்வலுக் கொண்ட மின் பிறப்பாக்கி மூலம்168 வீடுகளுக்கு மட்டுமே மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

பிரித்தானியாவினால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ள புதிய மின் பிறப்பாக்கியைப் பொருந்துவதன் மூலம் 1000 வீடுகளுக்கு மின் விநியோகம் மேற்கொள்ள முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இவ்வாறான 5 மின்பிறப்பாக்கிகளை பிரித்தானிய அரசு இளவாலை உட்பட வேறு சில இடங்களுக்கும் வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# படையினர் துப்பாக்கி பிரயோகம்

(மந்துவில்)

மீசாலை வடக்கு தெருவோரப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றோர் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சம்பந்தப் பட்டோர் தப்பிச் சென்று விட்டனர்.

இச் சம்பவத்தையடுத்து கொடிகாமம் கோயிலாமனைப் பகுதி இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு பலத்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

எவரும் கைது செய்யப்பட்டதாக தகவல் இல்லை. (க-39)

# கடந்த வருடம் மட்டும் மட்டக்களப்பில் 3068 குழந்தைகள் பிறந்துள்ளன

(மட்டக்களப்பு)

கடந்தவருடம் மட்டும் மட்டக்களப்புபோதனாவைத்திய சாலையில் 3068 குழந்தைகள் பிறந்துள்ளன.

இம் மாவட்டத்திலுள்ள 12 பிரதேச செயலர் பிரிவுகளிலுமே மேற்படி குழந்தைகள் பிறந்துள்ளன.

இக்குழந்தைகளில்111குழந்தைகள் இறந்துள்ளன. கடந்த ஆண்டு மட்டும்5435 பிரசவ தாய்மார்கள் குழந்தைப்பேற்றுக்காக வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில்6பேர் பிரசவத்தின்போது மரணமடைந்துள்ளனர். (க-60)

# மாணவர் சங்க கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 6-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

கல்லூரியின் அதிபர். திரு. எம். நாகேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாகக் குழு தெரிவு செய்யப்படவுள்ளது, (க-77)

# சரியான தலைமைத்துவம் இன்மையே நாட்டின் இன்றைய சீரழிவிற்கு காரணம்

## ஓய்வு பெற்ற நீதிபதி உரை

(தென்மராட்சி)

நமது நாடு எங்கே போகின்றது என்று தலைமைத்துவம் சிந்திக்க வேண்டிய நேரமிது. மிகவும் ஒரு மோசமான தாழ்வு நிலைக்குப் போய்க்கொண்டிருக்கின்றது எமது நாடு. அரசியல், அரசு, நீதிபதி, அரச அதிகாரிகள், நியாயவாதிகள், அதிபர்கள் மத்தியில் இன்று தலைமைத்துவம் இல்லாமல் போய்விட்டது. சரியான தலைமைத்துவம் இல்லாத காரணத்தினால் தான் எமது நாடு இத்தகைய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. மு. திருநாவுக்கரசு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற சர்வதேச லயன்ஸ் கழகங்களின் பிராந்தியம் 9, 10க்கான மாவட்ட தலைமைத்துவக் கருந்தரங்கில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றும்போது குறிப்பிட்டார்.

தலைமைத்துவத் திட்டத்தின் மாவட்டத் தலைவர் லயன். எஸ். பத்மநாதனின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்ட இக்கருத்தரங்கில் பிராந்தியம் 9, 10ல் இயங்கி வருகின்ற லயன்ஸ் கழகங்களைச் சேர்ந்த சுமார் 200 பேர் பங்கு கொண்டிருந்தனர்.

திரு. மு. திருநாவுக்கரசு அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஒருவன் வாழ்ந்தான் செயற்பட்டான், இறந்தான் அந்தக் குறுகிய காலத்தில் அவன் என்ன செய்தான் என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். தலைவர்கள் சமுதாயத்துக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் உலகம் முழுவதும் சீர்கெட்டு நெறிகெட்டு தவறிக் கீழே போய்க்கொண்டிருக்கின்றது. தலைவர்களிடம் அடக்கம், அறிவு, அன்பு, அஞ்ஞானம், திறமை மற்றும் உண்மையை உண்மை என்று சொல்லக்கூடிய திறன் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கில் தென் இந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி. எஸ் ஜெபநேசன் உரையாற்றுகையில் எம்மத்தியில் நல்ல தலைமைத்துவத்தினை உருவாக்கும் முயற்சியில் லயன்ஸ் கழகங்கள் ஈடுபட்டு வருவது நல்ல சேவையாகும்.

சிறிய தலைமைத்துவத்தினை வளர்த்துக் கொள்வதற்குத் தலைவர்களாக உருவாக்கப்படுபவர்கள் மத்தியில் எதையும் தாங்கும் சக்தி, நட்பு, வசீகரத் தோற்றம் இருத்தல் மிக அவசியம். அத்துடன் எம்மவர்கள் மத்தியில் உடன் பாட்டுச் சிந்தனைகளும் பேச்சுக்களும் ஏற்பட வேண்டும். எதிர்மறை சிந்தனைகளிலும், செயற்பாடுகளிலும் நாம் கூடியளவு ஈடுபடுவதாலேயே நாம் தாழ்வு நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம். உயர்வான எண்ணங்கள் சிந்தனைகளை தலைவர்கள் கொண்டிருக்க வேண்டியது முக்கியமானதாகும் எனக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்களான வி. ஆறுமுகம், எஸ். சத்தியசீலன் ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

பிராந்தியத் தலைவர்களான லயன். ஏ. தங்கேஸ்வரன், லயஸ். கே. தணிகாசலம் உட்பட வலயத் தலைவர்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றியிருந்தனர்.

தலைமைத்துவப் பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டிய கல்லூரி மாணவர்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

லயன். ஏ. சி. ரீ. கிருஸ்ணராசா நன்றியுரை வழங்கினார், (க-77)

# இன்னலுறும் தனங்களப்பு மக்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சியில் தொடரும் பதற்ற நிலையால் தனங்களப்பில் வசிக்கும் இந்து, மற்றும் கிறிஸ்தவர்கள் தமக்கு கிட்டவுள்ள மயானங்களுக்கு செல்ல முடியாதநிலைகாணப்படுகிறது.

இதனால் வேம்பிராய் போன்ற தூர இடங்களுக்கு சென்றே கிரியைகளை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை அப்பகுதி மக்களிடையே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-21)

# மட்டு. தொழில் நுட்பக் கல்லூரிக்கு 650 புதிய மாணவர்கள் சேர்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தொழில் நுட்பக்கல்லூரிக்கு புத்தாயிரமாண்டு 650 புதிய மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான விரிவுரைகள் நேற்றுசெவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது என கல்லூரிஅதிபர் எம். குணரத்தினம் தெரிவித்தார்.

முழுநேர 2ம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 7ம் திகதியும் 2ம், 3ம் வருட பகுதிநேர மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 12ம் திகதியும் ஆரம்பமாகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வருகைதர விரிவுரையாளர்களுக்கு நியமனக்கடிதம் வழங்கலும் ஒன்றுகூடலும் இம்மாதம் 5ம் திகதி சனிக்கிழமை பி. ப. 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-60)

## குண்டு வெடிப்பு

(மட்டக்களப்பு)

கல்லோயா ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கல்லோயாவிலிருந்து திருமலைநோக்கி வந்த ரயிலின் பெட்டி ஒன்றில் காணப்பட்ட குண்டை எடுத்து வெளியே எறிய முற்பட்ட போதே மேற்படி குண்டு வெடித்துள்ளது.

இச்சம்பவம் கடந்தஞாயிறு இரவு 9-30மணியளவில் இடம் பெற்றது. சம்பவம் தொடர்பாக உடனடியாக எவரும் கைது செய்யப்படவில்லை, பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் (க-60)

## வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதர் அணியினர் வவுனியாவிற்கு வருகை தந்தனர்

(வவுனியா)

வடக்கு -கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் திரு அண்ணாமலை வரதராஜப் பெருமாள் அணியினர் வவுனியா வந்துள்ளனர். அண்மையில் வருகை தந்தஇவர்கள் யாழ். மாநகர சபை உறுப்பினரான திரு. றொபேட் சுபத்திரன் தலைமையில் மன்னார் வீதி நகர சபை வீதியில் அலுவலகம் அமைத்துள்ளனர்.

இவர்கள் தாம் ஈ.பி.ஆர். எல். எவ். கட்சியைச் சேர்ந்தவர்கள்என கூறுகின்றனர். இந்த அமைப்பின் தற்போதைய வவுனியா பிரதேசத்திற்கு அமைப்பாளராக சிவம் என அழைக்கப்படும் கே. ஞானதாஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்கு சேவை செய்வதே தமதுபிரதானநோக்கம் எனத் தெரிவிக்கும் இவர்கள் தாமே ஈ. பி. ஆர். எல்.எவ். கட்சியினர் என்பதனை அடுத்த சிலவாரத்தில் நிரூபிப்போம் எனத்தெரிவித்துள்ளனர். (க)

## யாழ். குடாநாட்டு வீதி விபத்துக்கள் பெருமளவு நாய்களினாலேயே ஏற்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் ஏற்படும் வீதி விபத்துக்களில் பெரும்பாலானவை வீதியோர நாய்களினாலேயே ஏற்படுவதாக ஆதார பூர்வமாக புள்ளி விபரத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

அப்புள்ளி விபரம் மேலும் தெரிவிக்கையில், யாழ். நாட்டை பொறுத்தவரையில் விசர் நாய்க்கடியினால் இறப்பவர்களின் எண்ணிக்கை விசர்நாய் தடுப்பூசி போடுபவர்களின் எண்ணிக்கை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது.

### வருமுன் காப்பறிவு

சென்ற வருடம் (1999இல்) யாழ். குடாநாட்டில் 14 பேர் விசர் நாயின் தாக்கத்தினால் இறந்துள்ளார்கள். அவர்களுள் 9 பேர் ஆண்கள், 2 பேர் பெண்கள் 3 பேர் 12 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள், இதில் 13 பேர் நாய்கடித்தும் விசர்நாய் தடுப்பூசி போடாமலும், பெண் ஒருவர் இறந்த நாய் ஒன்றை அடக்கம் செய்யும் போது கையில் காணப்பட்ட புண்ணினூடாக நாயின் எச்சில் பட்டதால் அதனை அந்நேரத்தில் கவனிக்காமல் விட்டு விசர் நாய் தடுப்புஊசி போடாமையாலும் இறந்தார். இறப்பை சுகாதார வைத்திய பணிமனைவாயிலாக நோக்குமிடத்து யாழ்ப்பாணம் 4, பேர், தெல்லிப்பளை 4பேர் மானிப்பாய் 3 பேர், பருத்தித்துறை 2 பேர் சாவகச்சேரி ஒருவர்

### 1834 பேருக்கு விசர்நாய் தடுப்பூசிபோடப்பட்டுள்ளது

சென்றவருடம்சந்தேகத்திற்கிடமான நாய்கடித்ததினால் 1824 பேர் விசர்நாய் தடுப்புஊசியை போட்டுள்ளார்கள். குடாநாட்டில் விசர்நாய் தடுப்புஊசி போடும் இடங்களான யாழ். போதனா வைத்தியசாலையில் 1152 பேரும் பருத்தித்துறை சுகாதார வைத்திய சாலையில் 383 பேரும் சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் 138 பேரும் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் 129 பேரும் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் 32 பேரும் போட்டுள்ளார்கள். சுகாதார வைத்திய பணிமனை ரீதியாக பார்க்கும் போது பருத்தித்துறை 303 பேர், யாழ்ப்பாணம் 341 பேர், மானிப்பாய் 333 பேர், கோப்பாய் 318 பேர், தெல்லிப்பளை 219 பேர், சாவகச்சேரி 202பேர் ஊர்காவற்றுறை 18 பேர் அடங்குவர்.

### நாய்கள் அழிப்பு

சென்ற வருடம்குடா நாடு முழுவதும்தேடிஅழிக்கப்பட்ட நாய்களின் எண்ணிக்கை 3922 ஆகும். யாழ். மாநகர சபை 1269. சாவகச்சேரி 635 பருத்தித்துறை 491 தெல்லிப்பளை 452. கோப்பாய் 437, ஊர்காவற்றுறை 366, மானிப்பாய் 272 சென்றவருடம் யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் 12 மாதங்களும் எந்தவிதமான தட்டுப்பாடும் இன்றி யுத்த சூழ்நிலையிலும் விசர் நாய் தடுப்பு வக்சினை குடாநாடு மக்களுக்கு வழங்கியமையால் பெருமளவு மரணங்கள், வீண் சிரமங்கள் தடுக்கப்பட்டன. அரசினால்முற்றிலும் இலவசமாக ஒருவருக்கு மூன்று தடவைகளில் போடும் நாலு ஊசி மருந்தின் மொத்த விலை 1200 ரூபாவாகும். விசர் நாய் நோய் ஒருவருக்கு ஏற்படின் 100 வீதம் மரணம் நிச்சயம். நாயினால் கடியுண்ட ஒருவர் நாயைப் பார்த்து இது விசர் நாய் அல்லஎன்ற முடிவுக்கு வர முடியாது. இந்த முடிவு தவறானது, ஆபத்து நிறைந்தது. அந்நாய் தொடர் நாட்களாக அவதானிக்கப்பட வேண்டும்.

எனவே புத்தாயிரமாம் ஆண்டில் குடா நாட்டில் மேற் சொன்ன விடயங்களின் முன்னேற்றம் காண வேண்டுமாயின் அவை பின்வருவோரின் கையில் தங்கியுள்ளது.

★ நாய் கடிப்பதிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளும் ''சுய பாதுகாப்பு திறன்'' கொண்ட மக்களின் எண்ணிக்கை.

★ நாயினால் கடியுண்டவர்கள் சிகிச்சை எடுப்பதில் காட்டும் அக்கறை.

★ நாய் வளர்ப்பவர்கள் நாய்கள் மீது எடுக்கும் கவனம்.

★ குடா நாட்டில் தற்போது சேவையாற்றும் 51 பொது சுகாதார பரிசோதகர்களின் கடமையில் நாய்களின் பங்கு.

★ சுகாதார பணிமனைகள், பிரதேச சபைகள் இச் சேவைக்காகஒதுக்குகின்றநிதி நாய்களுக்சான தடுப்பு ஊசி வழங்கல், வண்டில்கள், ஆளணிகள் அழிப்பதற்கான நஞ்சுப் பொருட்கள், நாய் வளர்ப்பவர்களின் மீது எடுக்கும் சட்ட நடவடிக்கை மற்றும் பதிவேடுகளைப் பேணல்.

★ விசர் நாய் தடுப்பு ஊசி போடும் வைத்திய சாலைகளின் சேவை வருடம் பூராவும் விசர் நாய் தடுப்பு ஊசி கிடைக்கச் செய்தல், மற்றும் ஏற்பு ஊசி, மக்களுக்கு கொடுக்கும் விளக்கங்கள், முழுமையாக மருந்தினை எடுக்க வைத்தல், பதிவேடுகளை ஒழுங்காகப் பேணல்.

★ கட்டாக்காலி நாய்களை அழிப்பதில் மனிதாபிமானம் பார்க்கும் மக்களின் மனப்பான்மையும் 1999 இல் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய பணிமனையில் விசர்நாய்கடி, இறப்பு ஏதுமில்லை. விசர் நாய் தடுப்பு ஊசி போட்டவர்கள் 18 பேர் ஆக இருந்த போதும் அங்கே 366 நாய்கள் அழிக்கப்பட்டுள்ளன, இச்சேவை பாராட்ட வேண்டிய ஒரு விடையம்.

# செய்தித் துளிகள்

## கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நிஸ்கோ தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தினால் சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு அவர்களின் ஆற்றலை மேம்படுத்து மும மாக கடன்கள் வழங்கப்படுகிறது.

இதுவரையில் 21 பேருக்கு ஒரு லட்சத்தி 65 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. (க-75)

## மரங்கள் தறித்தல்

(சாவகச்சேரி)

அண்மைநாட்களாக கைதடி, நுணாவில்,சாவகச்சேரிப்பகுதிகளில் வீதியோரங்களிலுள்ள தென்னைகள், பனைகள்போன்றபயன்தரும் மரங்கள் வீதிப் பாதுகாப்பிற்காக தறிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-76)

## தீவகத்திலும் பகிஷ்கரிப்பு

(மண்கும்பான்)

உரும்பிராய்ப் பகுதியில் கைதான மாணவரை விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட பகிஷ்கரிப்பு நடவடிக்கை தீவக பாடசாலைகளிலும் நேற்றும் கடைப்பிடிக்கப் பட்டது. சில பாடசாலைகளுக்கு ஒரு சில மாணவர்களே சமூகம் கொடுத்தனர். (க)

## இலவச வகுப்புகள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பகுதி மாணவரின் நலன் கருதி குடத்தனைப் பகுதியில் தென் இந்திய திருச்சபையினர் இலவசமாக மாலை நேர வகுப்புக்களை நடத்தி வருகின்றனர்.இதனால் இப்பகுதியில் உள்ள பல மாணவர்கள் பெரும் நன்மையடைந்து வருகின்றனர். இப்பகுதியில் தனியார் கல்வி நிறுவனம் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-43)

## வருடாந்த பொதுக் கூட்டம்

(தென்மராட்சி)

'மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

இந்நிலையத்தின் புது வருடத்துக்கான நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர். திரு. எஸ். சண்முகம், உபதலைவர் திரு.எஸ். மதன் செயலாளர் திரு.ரீ· முரளிதரன் பொருளாளர் திரு.எஸ்.மயூரன் மற்றும் 10 பேர் கொண்ட நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (க-77)

## மலசலகூடம் அமைப்பு

(மந்திகை)

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிதியுதவியுடன் கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி மாணவர்களுக்கான மலசலகூடம் அமைக்கப்பட்டு வருகிறது.

மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இம்மலசல கூடம் ஆண், பெண் இருபாலருக்குமான நவீன தொழில்நுட்ப உபகரணங்களுடன் உருவாக்கப்பட்டு வருகிறது. (க-23)

## பயிற்சி நெறி

(ஊர்காவற்றுறை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் காரைநகரில் பெண்களுக்கான பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

தையல், மனையியல், கேக் ஐசிங் ,தலைஅலங்காரம், பூவேலை ஆகிய பயிற்சிகளை உள்ளடக்கியதாக இப்பயிற்சி நெறி அமைந்துள்ளது.

மூன்று மாதம் நடைபெறும் இப்பயிற்சி நெறியில் 50 பெண்கள் பங்குபற்றுவர். (க-75)

## திருடர் தொல்லை

(தென்மராட்சி)

மட்டுவில் தெற்கு மட்டுவில் கிழக்குப் பகுதிகளில் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இதன் காரணமாக இப்பகுதிகளில் உள்ள குடியிருப்பாளர்கள் இரவு வேளைகளில் பெரும் சிரமங்களை அன்றாடம் எதிர்நோக்கி வருகின்றனர்.

ஊரடங்குச்சட்டம் அமுலில் இருக்கின்றவேளைகளில் இவர்கள் தமதுகைவரிசையைக் காட்டி வருகின்றனர். (க-77]

## வெங்காய செய்கை பாதிப்பு

[அச்சுவேலி]

தொடர்ந்து இரவுவேளைகளில் நிலவி வரும் பனிமூட்டம் காரணமாக வெங்காயச் செய்கையாளர்கள் எதிர்பார்த்த விளைவினை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொடரும் பனி காரணமாக வெங்காயப் பயிரில் சேதம் விளைவிக்கும் பனிப் பூச்சிகளின் தாக்கம் அதிகமாக ஏற்பட்டுள்ளதனாலேயே விவசாயிகளுக்கு இப்படியான ஒரு நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[க-14]

## மந்துவிலில் திருட்டு

(மந்துவில்)

மந்துவில் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 9.00 மணியளவில் வீடு ஒன்றினுள் நுழைந்த திருடர் கோஷ்டி பணம், புடவைகள் போன்றவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

துவிச்சக்கர வண்டியை இவர்கள் திருட முற்பட்ட பொழுது அயலவர்கள் சத்தமிடவே அகப்பட்ட பொருள்களுடன் திருடர் கோஷ்டி தப்பிச் சென்றனர்.

மந்துவில் மேற்கு சுந்தரம் என்பவரது வீட்டிலேயே இத் திருட்டு இடம் பெற்றுள்ளது. (க-39)

## குடும்பவிபர பிரதிகளை ஒப்படைக்கவும்

(கல்வியங்காடு)

நல்லூர் ஜே/109 கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் அனைவரையும் பாதுகாப்புப் படையினரால்வழங்கப்பட்டுள்ள குடும்ப விபரப் படிவத்தின் இரு பிரதிகளை மேற்படி கிராம சேவையாளரிடம் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-54)

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

- குறள்

# வலம்புரி

## பரந்த சிந்தனை

புலவர் பெருமக்கள் தாங்கள் செய்த இலக்கியங்களை எல்லாம் உலக மக்களை நோக்கிச் செய்திருக்கிறார்கள். உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன் என்பதுசேக்கிழார் செந்நெறி. உலகம் யாவையும் தாமுள வாக்கலும் என்பது கம்பன் கவிவெள்ளம். உலகம் உவப்பவல்னேர்பு திரிதரு என்பது நக்கீரன் நற்றமிழ்.

மலர்தலை உலகத்து வாழ்வோர் எல்லாம் என்பது நம்பியகப்பொருள். உலகத்தீரே, உலகத்தீரே என்பது கபிலர் அகவல். ஆதிபகவன் முதற்றே உலகு என்பது வள்ளுவன் அறைகூவல். திரு.வி.க ''படுக்கைப்பிதற்றல்'' என்ற நூலில் உலகை நோக்குமின்! உலகை நோக்குமின்! எனக் கூறுகின்றார்.

எங்கள் எண்ணக்கரு என்னவெனில் பரந்த உலகத்தில் விரிந்த தமிழ்மண்ணில் பரந்த சிந்தனை ஆதியானது. உலகத்தோடு ஒட்ட வாழ்ந்த நாகரிகமக்கள் நாம் இன்று ஆளுக்கொரு கோலமாய் அவலப்பட்டு உழல்கிறோம். புறசெயற்பாடுகளால்சல்லரித்துப்போன உள்ளம் ஒரு தலை பண்பாட்டு விழுமியங்கள் தேய்ந்தமிழ்ந்த துர்ப்பாக்கியம் இன்னொரு நிலை.

குறுகிய வட்டத்துள் நின்று, குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடுவது இன்றைய நிலை. வாழ்வின் அனர்த்தங்கள் அனைத்தும் நாங்கள் வரித்துக் கொண்டவை. பாரம்பரிய நீரோட்டத்தில் இருந்து வழிதவறிய வங்குரோத்துநிலை.

திரும்பிப் பார்ப்போம். திசை தோறும் நோக்குவோம். பண்பால் உயர்வோம். பாங்குற வாழ்வைப்பக்குவப்படுத்துவோம். உலகொடு ஒட்ட வாழ்வோம். பிறர் தமர் என்ற பேதமறுப்போம். பெருமையோடுயர்வோம் பைந்தமிழர் பாங்கினை உயர்த்துவோம்.

கல்லும் பேசும், கல்லும் கனியும் என்ற நிலையில் அன்பால் உயர்ந்தவர்கள் யாம். அன்புடையவர் எல்லாமுடையர் என்பது தமிழ் வேதம். இது இவ்வாறிருக்க அழுக்காறு, அவா, வெகுளி இன்னாச் சொல் என்றகுட்டையில் விழுந்துநெடுமூச்செறியும் நீசர்களை என்னென்பது உலகினை ஒன்று சேர்க்க உவந்திட்ட புலவர்கள் நெறி நிற்போம், பல்துயர் போக்கும் பக்குவ இதயங் கொள்வோம்.

- அன்புடன் ஆசிரியர்

# பெப்ரவரி 04 ஆம் திகதி முதல்

# யுத்த நிறுத்தத்தை அமுல்படுத்துக

## ஜனாதிபதிக்கு மகஜர்

(தென்மராட்சி)

நாட்டின் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற மக்கள் யுத்த அனர்த்தங்கள் காரணமாக பல வருடங்களாகப் பல்வேறு விதமான துன்பங்களையும் அனுபவித்து வருகின்றார்கள். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் பொருட்டு இலங்கையின்சுதந்திர தினமாகிய பெப்ரவரி 4 ஆம் திகதி முதல் யுத்த நிறுத்தத்தினைப் பிரகடனம் செய்யும்படி மறவன்புலவு பாரதி சன சமூக நிலையத்தின் தலைவர் திரு. செல்லக்கிளி ஆனந்தரஞ்சன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

அம் மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இந்த நாட்டில் இடம் பெற்று வருகின்ற யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வந்து நிரந்தர சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கு இந்த நாட்டு மக்கள் தங்களுக்கு நல்ல வாய்ப்பினையும் அனுமதியையும் நடந்து முடிந்த தேர்தலில் வழங்கியுள்ளனர்.

இதன் அடிப்படையில் தங்களுக்குள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி யுத்த நிறுத்தத்தினை மேற்கொள்ளுங்கள் என அம் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் திரு. டக்ளஸ் தேவானந்தா இலங்கையிலுள்ள நோர்வே தூதுவர் யாழ்ப்பாணத்திலுள்ள யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனம் மற்றும் ஐ.சீ.ஆர்.சிக்கும் அனுப்பப்பட்டுள்ளன. [க-77]

# கொட்டடி சம்பவம் தொடர்பாக தந்தை, மகன் இருவரும் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

கொட்டடிசினிவாசகம்வீதியைச் சேர்ந்த தியாகராஜா குகதாசன் (22 வயது) நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

குகதாசனின்கைதுதொடர்பாக அவரது தந்தையிடம் ரசீது வழங்கப்பட்டிருந்த போதிலும் சம்பவதினம் மாலை7 மணியளவில் குகதாசனின் தந்தை சின்னத்தம்பி தியாகராஜா (வயது53) என்பவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுதடுத்துவைக்கப்பட்டிருப்பதாகமனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தியாகராஜா விடுதலை செய்யப்படுவார் என பொலிஸ் தரப்பினர் அறிவித்திருந்த போதிலும் நேற்று நண்பகல் வரை அவர் விடுதலை செய்யப்படவில்லை என ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (க-14)

## நேர்முகப்பரீட்சை

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையினால் நடாத்தப்படவுள்ள மனைப் பொருளியல் பயிற்சி நெறிக்கான தகுதியான பயிற்சியாளர்களை தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை இன்றுநடைபெறும். (க-4)

## சமாதான நீதிவான் நியமனம்

(மந்திகை)

யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக செல்லப்பா செல்வராசா நீதி அமைச்சினால்நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அல்வாய் தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபராவார்.

பருத்தித்துறை மாவட்டபதில் நீதிபதி அ.க.நடராசா முன்னிலையில் நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் அல்வாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும், நெல்லியடி ப.நோ.கூ.சங்க அல்வாய் தெற்கு கிளைத்தலைவராகவும் கடைமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (க-23)

## பிரதேச செயலர் ஓய்வு

(இளவாலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கே.சந்திரராசா கடந்த மாதத்திலிருந்து தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது இளைப்பாறலை அடுத்து புதிய பிரதேசச் செயலர்ஒருவரை நியமிக்கும்வரைஉடுவில் பிரதேச செயலர் ஆ.மகாலிங்கம் பதில் பிரதேச செயலராக கடமை ஆற்றுவார். (க-12)

# ஒவ்வொரு தமிழ்ப்பெண்ணிடமும் குடிகொண்ட அச்சத்தை கருவாகக் கொண்டதே 'வேள்வித் தீ'

இந்த மண்ணில் இராணுவத்தினரின் திடீர் தேடுதலின் பொழுது, வீடு ஒன்றில் அவர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட ஒரு தமிழ்ப்பெண்ணின், அதுவும் படித்த, பட்டம் பெற்ற இன்னும் கூறுவதானால் உள் ஆற்றுப்படுத்தலை ஒரு சேவையாகக் கருதிய அந்த வாசுகியின் கதைதான் வேள்வித் தீ''- இது ஒரு யதார்த்த நாடக பாணியில் அமைந்தாலும் கூட, நவீன அரங்கியல் உத்திகளையும், குறியீடுகளையும், அத்துடன் முறிவுபட்ட பிம்பங்களையும், துண்டாடப்பட்ட வினைப்பாடுகளையும், மாறுபட்ட காட்சிகளையும் உள்ளடக்கியதாய், இன்னும் நவீன அரங்கமொழியில் கூறுவதானால் அரங்கியல் இலக்கணத்தையும் அரங்கியல் உடற் கூற்றினையும் மிகதுல்லியமாக பிரதிபலித்த ஒரு நாடகமே தான்.

கதாசிரியரின் அரங்கமொழி மிக, மிக அற்புதம் உதாரணமாக ''ஆணவம் அதன் மார்பில் புரண்டது'' ஆதிக்கக் கொடுங்கோல் அதன் காலிடைக் கிடந்தது'' என்றது போன்ற சிலேடை வசனப் பாங்கும், இறுதியில்இராமன் ரங்கனோடு உரையாடும் சந்தர்ப்பங்களும். கதாசிரியரின் தனித்துவத்தையும், அவருக்கே உரித்தான அரங்கியல் நிபுணத்துவத்தையும் வெளிப்படுத்தியது என்பதில் ஏவ்வித சந்தேகமும் இல்லை தான்.

ஒலி, ஒளி அமைப்புக்கள் பாராட்டக் கூடியதாக இருந்தன. நாடக விழாவிற்கு ஏற்ப ஒளி பயன்படுத்தப்பட்டமையும், அத்துடன் மேடையில் சமநிலை பேணப்படுப் விதமாக நடிகர்களின் அங்க அசைவின் ஒத்திசைவு அமைந்திருந்தமையும் நாடகத்தின் முடிவுவரை ஒரு அரங்கியல் அழகை கொடுத்துக் கொண்டிருந்தது என்னவோ உண்மைதான்.

திருப்பள்ளியும், திருவாசகமும் பாரதிபாடலும் பின்னணி இசையாக வந்து மண்ணின் மணத்தோடு மனதை ஒன்றிக்க வைத்தமையை குறிப்பிட்டேயாக வேண்டும்.

ரங்கன், வாசுகி, ரமணன், சாகித்தியா, நளாயினி போன்றவர்கள் நன்றாக நடித்தார்களாயினும், நளாயினியின் பாத்திரத்தில் உண்மை யதார்த்தம் தொனித்தது. ஆனால் வாசுகியின் நடிப்பின் புதுமையும், எளிமையும், பேச்சும், நடையும் அவளை ஒரு மாட்டுப் பெண்ணாகக் காட்டியதே யொழிய இன்றைய யாழ்ப்பாண படித்த பெண்ணின் தன்மை தென்படவில்லை என்பது ஒரு குறைபோலும்.

இன்னும் நடிப்பில் யதார்த்தம் தெரியவில்லை என்றாலும், படிப்பாலும், பதவியாலும், பண்பாடு, கலாச்சாரம், கற்பு - கற்பு என்ற வார்த்தைகளுக்குள்ளும், ஊறிப்போன இந்த யாழ்ப்பாணப் பெண் எப்படியும் படையினர் தேடிவரும் பொழுது வீட்டில் நிற்கவே மாட்டாள் என்பதுதான் யதார்த்தம். இது இந்த மண்ணின் யதார்த்தத்திற்கு சற்று வெளியால் கதையை கற்பனைக்குள் தள்ளி விடுகின்றது. வாசுகி தன் வாயாலேயே ''நான் தனிய நிண்டது பிழை'' என்று பின்னர் கூறுவது, ஆசிரியர் பின்னராவது இதை உணர்ந்ததைக் காட்டுகின்றதோ?

இது ஒரு நவீன பாங்கில் அமைந்த யதார்த்த நாடகம் தான். ஒரு கதாசிரியர் கூறியது போல ''ஒவ்வோர் தமிழ் பெண்ணிடமும் ஆழ உறைந்து போயிருக்கும் அச்சத்தை கருப்பொருளாகக் கொண்ட'' நாடகம் தான். எனவே தான் இது ஒரு கலாசார நாடகமாகவே'' முடிந்து விட்டது. ஆனால் கலாசாரம் நாடகமாக்கப்பட்டிருந்தால் இது ஒரு சமூக மாற்றத்திற்கான ஒரு கனதி நிறைந்த அரங்காக பேசப்பட்டிருக்கலாம் போலும். மிகவும் தாக்கமுடைய ஒரு இலட்சியம் இதனூடாக சற்றே உரத்த குரலில் பேசப்பட்டிருக்கலாம். அது காலத்தின் தேவையும் கூட. ஆனால் ஆசிரியரோ பாத்திரங்களை எதிர் கருத்தாகவும், ஒரு சார் கருத்தாகவும், நடுநிலைக்கருத்தாகவும் பேச வைத்து இறுதியில் கூட்டுக் கருத்தாகவும் முடித்து விடுகின்றார், இது அவருடைய ஏனைய நாடகங்களிலும் நாம் காணும் இயல்பான தன்மையேதான். இதன் காரணமாகவே இந் நாடகம் இலட்சியம், புதுமை, புரட்சி, ஒருதிருப்புமுனை என்ற பாங்கைவிட்டு ஒரு நல்ல நாடகம் என்பதோடு முற்றுப் பெறுகின்றது போலும். இது ஒரு நாடகவியல் தப்பிக்கும் தன்மையாகக் கூட இருக்கலாம்.

அரங்கு உலகத்தை மாற்ற வேண்டும், வாழ்வை மாற்ற வேண்டும் என்று ''பெக்'' கூற இந்த 21ஆம் நூற்றாண்டிலும் இந்த நாடக முடிவு, யாழ்ப்பாணத்தை அப்படியே காட்டி அமைதியாக முடிக்கின்றது. காரணம் பழையவர்களுக்கு பழகிப்போன ஒழுக்கவியல் சார்ந்த நிதானச் செயற்பாட்டின் தன்மையாக இருக்கலாம் போலும். பரவாயில்லை இது ஒரு அசல் யாழ்ப்பாணம் தானே....

ஒரு பிரேத பரிசோதனைக்காக குழியில் இருந்து அது எடுக்கப்படும். இறுதியில் பரிசோதனை நிறைவேறாமலே குழி மூடப்படுவதான நிலை தென்பட்டதால் முடிவு ஒரு சிலருக்கு விரக்தியாக இருந்ததில் வியப்பில்லை. நாடகம் தனது நோக்கத்தை, இலட்சியத்தை துல்லியமாக காட்டாது விட்டதன் மூலம் பார்வையாளரைச் சற்று அங்கலாய்க்க வைக்கின்றது. நாளைய இனம் முக்கியமாக பெண்சந்ததியின் எதிர்பார்ப்புகளுக்கு தீனி கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம் வேறு. உண்மையும், மனிதமும் அறிவியலுக்கு அப்பால் பண்பாட்டுக் கோலத்திற்குள் பூசி மெழுகப்பட்டுவிட்டதோ என்ற ஏக்கமும் இல்லாமல் இல்லை.

நேற்றைய யாழ்ப்பாணத்தவரின் சிந்தனைக்கும், பழக்க தோஷத்திற்கும் இந்த நாடக முடிவு ஒரு விருந்தாக அமையலாம். ஆனால் ஒரு மருந்தாகவில்லையே என்று இளைய நாளைய சந்ததி வருத்தமுறுவதில் தவறில்லைதான். பாவம் அந்த வாசுகி! என்ன செய்வது இந்த மண்ணில் பிறந்தவளாயிற்றே!

ஒன்று மட்டும் உண்மை அவள் இராணுவத்தால் பாலியல் வன்முறைக்குத் தான் ஆளாக்கப்பட்டாள் ஆனால் இனித்தான் ரங்கனால் தினமும் இவ்வித வேதனைக்கு ஆளாகப் போகிறாள் காரணம் அவள் தூயமனத்தால் அல்லாமல் உடலாலும் அவனோடு...

இந்த மண்ணின் ஒரு சில பாரம்பரியம், கலாசாரம், பண்பாடு என்பனவை விமர்சனத்துக்குள்ளாக்கி ஓர் மீள் பார்வைக்கு உட்படவேண்டும் என்ற கோஷம் எழும் இக்காலத்தில் அழுக்குத் துணியை அம்பலத்தில் அலசி விடுவது அதன் கறை போகாமலே வீட்டுக்குளடுத்துச் செல்லல் விவேகமாகுமா? புதிய பாத்திரத்தில் வார்க்கப்பட்ட பழைய இரசமானதால் ஆவலுடன் ஏற்பட்ட அதி உயர் எதிர்பார்ப்பில் சற்றுதளர்ச்சி ஏற்பட்டது என்னவோ உண்மைதான்.

- அல்வி -

*

# மட்டக்களப்புச் சிறைக்கைதிகளை அனு. சிறைக்கு மாற்றுவதில்லை

## நீதி அமைச்சின் செயலர் அறிவிப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை அனுராதபுரம் சிறைச் சாலைக்குக் கொண்டு செல்வதென ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக நீதி அமைச்சின் செயலாளர் எம். ஜெயசிங்க அறிவித்துள்ளார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் மூன்று பெண்கள் உட்பட 53 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தம்மை அனுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்புவதை தடுக்கக் கோரி மட்டக்களப்பு மாவட்டத் தமிழர் விடுதலைக்கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜாவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமை தெரிந்ததே இதனைத் தொடர்ந்து பொன் செல்வராஜா நீதி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு விளக்கியபோதே மட்டக்களப்புச் சிறைச்சாலையிலிருந்து கைதிகளை இடமாற்றுவதில்லை என முடிவெடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது[ (ந)

## வைத்தியர்கள் இன்றி அவதி

(வடமராட்சி கிழக்கு)

மந்திகை ஆதார வைத்தியசாலை மனநோயாளர் பிரிவு செயலிழக்கும் நிலையில் உள்ளது, இப்பிரிவிற்கு வைத்தியர் இல்லாமையே காரணமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இவ்வைத்திய சாலையில் மருந்துக்கும்பாரிய தட்டுப்பாடுஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (43)

## ஐ. தே. க. தலைவர் பதவியிலிருந்து ரணில் பதவி விலக வேண்டும்

### சூல பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்காவை நீங்காது விட்டால், எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நாம் விலகிவிடப் போவதாக மாற்று அணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் சூல பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து முன்னோக்கிச் செல்வதற்கு மாற்று அணியினர் உத்தேசித்து இருப்பதாகவும் சூல பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும் பல பராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகிவிடுவார்கள் என்ற அச்சத்தினாலேயே தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பது அவசியமென ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் எனவும் சூலபண்டார குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளையில் ஐக்கிய தேசியக்கட்சியில் மீண்டும் இணைவது தொடர்பாக தமது குழுவைச் சேர்ந்தவர்கள் பேச்சுவார்த்தை நடாத்துவதாக பத்திரிகைகளில் வெளியான செய்தியில் எந்தவொரு உண்மையும் கிடையாதெனவும் அவர் மறுத்திருக்கிறார் [க-9]

## பரிசளிப்பு விழா ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய்ப் பகுதியில் உள்ளபிரபல மகளிர் கல்லூரி ஒன்றின் பரிசளிப்பு விழா மாணவர்களின் வரவு இல்லாமல் [மூன்று மாணவர்களுடன்] ஒத்திப் போடப்பட்ட சம்பவமென்று நேற்று நடைபெற்றதாகத் தெரியவந்துள்ளது.

பாடசாலை பகிஷ்கரிப்புப் போராட்டம் நடைபெற்றுக் கெண்டிருக்கும் இந்தச்சந்தர்ப்பத்தில் பரிசளிப்பு விழாவை நடத்தமுற்பட்டது குறித்து பெற்றோர்கள் விசனம் தெரிவித்தனர். [வ]

# மாணவர்கள் மகாபொல சான்றிதழை யாழ். செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியாண்டு 98/99 இல கல்விபயிலும் மாணவர்களில் இதுவரை தமது மகாப்பொல புலமைப்பரிசில் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் யாழ். செயலகத்திடம் தொடர்புகொண்டுபெற்றுக் கொள்ள முடியுமென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச் சேவைகள் பிரிவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2.-ம் திகதி இக் கல்வியாண்டில் பயிலும் மாணவர்களுக்கான மகாப்பொல சான்றிதழ் வழங்கும் வைபவம் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது தெரிந்ததே.

இதன்போது சான்றிதழ் பெறத்தவறிய மாணவர்களுக்கே இந் நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.[க-7]

# அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரன் அடுத்தமாதம் இந்தியா பயணம்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் அடுத்த மாதம் 20ஆம் திகதி இந்தியா செல்லவுள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா செல்லும் பில் கிளின்ரன் கடந்த 22 வருடங்களின் பின் இந்தியா செல்லும் அமெரிக்கத் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1978 ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி காட்டரின் இந்திய விஜயத்தின் பின் இந்தியா செல்லவுள்ள அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை அமெரிக்க நாட்டு ஜனாதிபதியின் இந்திய விஜயம் இரு நாடுகளுக்கிடையேயான உறவை மேலும் வலுப்படுத்துமென இந்திய வெளியுறவு அமைச்சின் செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ந)

## ஷெல் தாக்குதல் துப்பாக்கி வேட்டு

(யாழ்ப்பாணம்)

தனங்களப்பு, கேரதீவுப் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணி முதல் கடுமையான ஷெல் மற்றும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன.

தனங்களப்பு பகுதியில் புகை மண்டலம் எழும்பியதையும் காணமுடிந்தது. அது பற்றிய மேலதிக விபரம் தெரியவரவில்லை. (க-4)

## 'புளொட்' விஜயன் மரணம்

(வவுனியா)

வவுனியா இறம்பைக்குளம் சங்கரப்பிள்ளை ஒழுங்கையில் காலஞ்சென்ற மாணிக்கதாசனின் மாமியார் வீட்டில் இறந்து கிடக்கக் காணப்பட்ட புளொட் அமைப்பைச் சேர்ந்த விஜயன் என அழைக்கப்படும் ராசதுரை தயாபரனின் மரணத்தின் சந்தேகம் ஏற்பட்டுள்ளது என பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

சுருக்கிட்டு இத்த வாலிபர் மரணமாகியிருந்தார் என தெரிவிக்கப்பட்டு இருந்த போதிலும் அவர் தற்கொலை செய்துகொண்டாரா? அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது பிரேத பரிசோதனையினை அடுத்தே தெரியும் என வவுனியா குற்றவியல் பிரிவிற்குபொறுப்பான பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார் சடலம் நேற்று பகல் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## மூன்று...

ணம் செந்தில்ராஜ்) யாழ்ப்பாணம்.

★ ஈழதர்ஷன் (செல்வராசா சுகந்தன்)நெடுங்கேணி

## பகிஷ்கரிப்பில்...

ணுவ முகாமில் கையொப்பமிட வேண்மென்றும் வல்வெட்டித்துறை இராணுவ அதிகாரி உத்தரவிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (வ-11,.23)

## இரண்டாவது...

ஆசிரியர்களை மட்டுமே பாடசாலைகளில் இருந்ததாகவும் வலம்புரியின் பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

இப் பகிஷ்கரிப்பின்போது, போது, வடமராட்சியில் 11 ராணவர்கள் கைதாகி பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## படையினரின்.,,

உரிமை கோரவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

திருட்டு முயற்சியையடுத்து பிரஸ்தாப நபர் மீது படையினர்துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதும் அதனையடுத்து இவர் மரணமானதும் ஏற்கனவே தெரிந்ததே.

## அனாமதேய...

வில்லை. வவுனியா நகரம் வரை பரவிய இப் பதற்றம் பிற்பகல் தணிந்ததாகவும் தொலைபேசி இயக்குநரும் மேலும் இருவரும் படையினரால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டபின் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-103)

## 29 பேர்...

டத்தைச் சேர்ந்த செல்லமுத்து சந்திரகுமார் அலைகரை வீதியைச் சேர்ந்த முத்துராசா கஜமுகன் ஆகியோரின் விவரங்கள் இதுவரை கிடைக்கவில்லை என்வும் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தான் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பெருமாளை...

சந்திரனோ அல்லது வேறு யாருமோ தலையிட முடியாது எனவும் கூறப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல், எவ் இல் இருந்து தன்னை இடைநிறுத்தியது தொடர்பாகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி குமார் எக்கரத்தினா முன்னிலையில் வடகிழக்கு மாகாண முன்னாள் முதல்வரும் ஈ. பி) ஆர். எல். எவ் பிரமுகருமான வரதராஜப்பெருமாள் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரரான வரதராஜப் பெருமாள் பிரதிவாதிகளாக சுரேஷ் பிரேமச்சந்திரன், மத்திய குழு உறுப்பினர் தர்மராசா வில்சன் ஆகியோரைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கை விசாரித்த நிதிபதி மேற்படி தீர்ப்பை வழங்கினார். (ந

## பலாலி...

யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு பேசியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடனும் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுடன் டக்ளஸ் தேவானந்தா தொடர்பு கொண்ட போது மாணவர்களை மூன்று தினங்களுக்குள் விடுதலை செய்ப நடவடிக்கை எடுப்பதாக புலனாய்வுத் துறை அதிகாரிகள் உறுதியளித்திருந்தனர்.

அதன் பிரகாரம் இன்று புதன்கிழமை கைது செய்யப்பட்ட மூவரும் பலாலி இராதலைமையகத்தில் வைத்து விடுதலை செய்யப் படுவர்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி தமிழ் அரசியல் கட்சிகளும் அறிக்கை வெளியிட்டிருந்ததையும் குறிப்பிடத் தக்கது.

இதேவேளை மாணவர்களின் விடுதலை உறுதிப்படுத்தப்பட்ட பின் பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிவிடப்படுமென மாணவர் அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். வ.ந

## அதிகாலை....

கர ஷெல் தாக்குதலினால் கிழக்கு அரியாலை, அரியாலை, மணியந்தோட்டம் ஆகிய பகுகிகளில் பயங்கரமான பதற்றம்நிலவியது. இது தொடர்பான செத விபரம் தெரியவரவில்லை,

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணபிள்ளை விஜயகுமார்

(இளைப்பாறிய எழுது வினைஞர்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தோப்பு அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ண பிள்ளை விஜய்குமார் 31.01.2000-ம் அன்று காலமானார்.

அன்னார் தங்கச்சியம்மாவின் அன்புக் கணவரும், துஷ்யந்தி(கண்டி), தமயந்தி (ஓமான்) ஆகியோரின் பாசமிகுதந்தையும்,யோகேந்திரன் பொறியியலாளர் )கண்டி), ஸ்ரீஸ்கந்தராசாபொறியியலாளர் (ஓமன்) ஆகியோரின் மாமனாரும் மிதுனன், ஜெயந்தன், தகானா, சுகன்யா, விசாகன், (கண்டி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின்தகனக் கிரியைகள்இன்று (02.02.2000) நண்பகல் 12.00 மணியளவில் மகியாவி மயானத்தில் இடம் பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்
திருமதி பா. உமாதேவி

தொடர்பு;
வீதிஅபிவிருத்தி அதிகார சபை
(ஆர்.டி.டி)
குண்டகசாலை
கண்டி
TP.No.08420563

தோப்பு
அச்சுவேலி
(சி-48)

வர்த்தகப் பெருமக்களே !

உங்கள் வியாபாரம் பெருக இன்றே வலம்புரியில் விளம்பரம் செய்யுங்கள்.

மிகக் குறைந்த கட்டணத்தில் உங்கள் விளம்பரங்களைத் தாங்கிவர வலம்புரி தயாராகவுள்ளது

விரையுங்கள் விளம்பரம் செய்யுங்கள் வியாபாரம் பெருகட்டும்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000- ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.